1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *338*, திரு. மு. நடேசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

338—

சேலம் பாதாள சாக்கடைத் திட்டம்

**35532*—திரு. மு. நடேசன்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான வேலை இதுவரை துவங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) இத்திட்டத்தை நிரந்தரத் திட்டமாக உலக வங்கி மூலம் கடன் பெற்று பெரிய அளவில் செயல்படுத்த முடியுமா?

(இ) இது குறித்து ஒரு நிரந்தர திட்டம் போடப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில், அது பற்றிய முழு விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) : ஆம். இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள அநேக தடைகளை நீக்கி, ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன், விரைவில் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு *1980*-ஆம் ஆண்டில் ஒரு புரபோசல் போடப்பட்டுள்ளது. அன்றையதினம் *9* கோடியே *10* இலட்சம் அளவுக்கு அந்தப் புரபோசல் போடப்பட்டது. அதற்கு பின்னாலே காலக்கட்டங்களில் அதனுடைய எஸ்கலேஷன் சார்ஜ் என்பது ஏறிக்கொண்டு இன்றையதினம் இந்தத் திட்டத்தை முழு அளவில் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றுவதற்கு *50, 60* கோடி அளவுக்கு ஆகும் என்று சொல்கிறார்கள். ஆகவே இந்த உலக வங்கி உதவியுடன் *50, 60* கோடி ரூபாயைப் பெற்று இந்தத் திட்டத்தை முழு அளவில் நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[*1995 ஏப்ரல் 18*

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகராட்சிக்கு முழுமையான பாதாள சாக்கடை அமைத்துக் கொடுப்பதற்காக அரசு இன்றைக்கு முழுமூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்தேன். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் மதிப்பீடு 9 கோடி ரூபாயாக இருந்தது என்றும் இன்றைக்கு 50,60 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றும் சொல்லி .இருக்கிறார்கள். அப்படி இன்றைக்கு 50, 60 கோடியாக இது உயரவில்லை. இன்றைய காலக்கட்ட மதிப்பீட்டின்படி சுமார் 22 கோடி ரூபாய் அளவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு காலதாமதம் என்று சொல்லும்போது அது வாரியத்தினுடைய பணியினாலோ அல்லது அரசாலோ அல்ல. அங்கே இருக்கிற லோக்கல் பிரச்சினை என்று சொல்கிற அளவில் இந்தத் திட்டத்திற்குண்டான கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகளுக்கான நிலம் ஆர்ஜிதம் செய்வதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, அங்கே இடம் தேர்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. முதன்முதலாக பூலாவாரி கிராமத்தில் அதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் அங்கே இடத்தை கையகப்படுத்தும்போது கிராம மக்களிடத்திலிருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதால் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய இயலவில்லை. அதைப்போல அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் பல சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் உருவாகும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு தெரியப்படுத்திய காரணத்தால் பணிகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. அதற்கு மேல் அந்த பூலாவாரி கிராமத்தை விட்டு சேலம் உருக்காலை அருகில் முருங்கம்பட்டி, தச்சம்பட்டி, சங்ககிரி சாலையில் உள்ள உத்தமசோழபுரம், புத்தூர் அக்ரஹாரம், தர்மபுரி சாலை பாரப்பட்டி, எருமைப்பாளையம் பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றைக்கு அங்கே அந்தப் பகுதியில் நிலம் கையகப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்ட காரணத்தாலும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்ட காரணத்தாலும் இன்றைக்கு அந்தப் பகுதியிலும் நிலம் எடுப்பு இன்றைக்கு கைவிடப்பட்டிருக்கிறது. அதேபோல் இன்றைக்கு இந்தத் திட்டத்தை எப்படியாவது செயல்படுத்தியாக வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான், குறிக்கோளோடுதான், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித்

1995 ஏப்ரல் 18]

தலைவி அவர்களுடைய மேலான ஆணையின் பேரில், சேலம் நகராட்சியினுடைய சம்மதத்தின் பேரில், நகராட்சிக்குச் சொந்தமான சுமார் 2100 ஏக்கர் பரப்புடைய பனமரத்துப்பட்டி ஏரியில், இந்தக் கழிவு நீர் சுத்திகரிப்பு பணிகளுக்காக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த பனமரத்துப்பட்டி ஏரியில் ஆய்வை நடத்துகிறபோது, அங்கே நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கிற பொதுமக்கள் குறுக்கீடு செய்து, உயர்நீதிமன்றத்திலே ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்து, தடை ஆணையைப் பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையாணை இருக்கிற காரணத்தாலேதான், இன்றைக்கு அந்தத் திட்டம் தாமதப்பட்டு இருக்கிறது, அங்கே நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. இது சம்பந்தமாக கடந்த மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை வைத்தும், துறையினுடைய செயலாளர் அவர்களை வைத்தும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியவர்களை வைத்தும், ஒரு உயர்மட்டக் கூட்டம் போடப்பட்டதில், கடுமையான நடவடிக்கை எடுத்து--சுமார் 200 ஏக்கர், முதல் கட்டமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தேவைப்படுகிறது, ஆகவே, முதல் கட்டமாக ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கிற அந்த 200 ஏக்கர் பகுதியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், உயர்நீதிமன்றத்திலே இருக்கிற தடையாணையை நீக்குவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அதற்குண்டான காலவரையறையை அரசு வகுத்துக் கொடுத்து இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினைகள் களையப்பட்டு, சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம், இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய புனிதத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, சேலம் நகரமானது மாநகராட்சியாக ஆக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டமானது பழைய நகராட்சிப் பகுதியையொட்டி போடப்பட்ட திட்டமாகும். ஆகவே, புதிதாக இணைக்கப்பட்டுள்ள மாநகராட்சிப் பகுதிகளும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு எந்த அளவிற்கு மக்கள் தொகை இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துத்தான், இன்றைய காலகட்டத்தில், எவ்வளவு மதிப்பீடு இதற்கு ஏற்படும் என்பதை எல்லாம் கணக்கிலே எடுத்துதான், எல்.ஐ.சி. லோன் என்று சொல்லப்படுகிற ரிவைஸ்டு புரப்போசலை 22 கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்து இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த எக்ஸ்டன்டட் ஏரியா என்று சொல்கிற அந்தப் பகுதிகளுக்கும், இது சம்பந்தமாக அந்தத் திட்டத்தை நீட்டிக்க முடியுமா என்பதை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய சேலம் நகராட்சிக்கு மட்டும்தான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டு தற்போது அதனுடைய காஸ்ட் எஸ்கலேசன் காரணமாக 22 கோடியாக ஆகியிருக்கிறது. இப்போது மாநகராட்சியாக ஆக்கப்பட்டு இருக்கிறது. 44 வார்டாக முன்பு இருந்தது இப்போது 74 வார்டாக எக்ஸ்டன்ட் ஆகியிருக்கிறது. எனவே இந்த ஆடட் ஏரியாவிற்கும் இன்னும் இன்வெஸ்டிகேசன் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தில், ஆடட் ஏரியாவிற்கும் சேர்த்து இன்வெஸ்டிகேசன் செய்வதற்கு உத்தரவிடப்படுமா? தற்போது பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு கடைசியாக பனமரத்துப் பட்டி ஏரியை தேர்வு செய்து, அதிலே கோர்ட் தடையாணை இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட பல கோடி ரூபாய் திட்டமான இந்தத் திட்டத்திற்கு சேலம் மாநகராட்சி சம்பந்தப்பட்ட. கிட்டத்தட்ட 10, 20 லட்சம் மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு, இந்தத் திட்டத்திற்கு சென்ற ஆண்டே 2 கோடி ரூபாய் ஒதுக்கியதாக நான் கருதுகிறேன். இந்த ஆண்டும் பணம் ஒதுக்க இருக்கிறோம். எனவே, அந்தத் தண்ணீரைக் கொண்டுபோய் டிஸ்போசல் செய்து, அங்கே சுத்திகரிப்புக்கு உண்டான இடம் தேர்வு செய்யப்பட்டாலும், கிட்டத்தட்ட 10 ஆண்டுக்காலமாக ஆண்டுதோறும் பணத்தை ஒதுக்கி ஒதுக்கி, அது செலவழிக்கப்படாமலே இருக்கிறது. எனவே, இதற்கு ஒரு போர்க்கால நடவடிக்கை மேற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய

1995 ஏப்ரல் 18]

அனுமதியைப் பெற்று, அந்த 100 விவசாயிகளையும் காவல்துறையை வைத்து அப்புறப்படுத்தி, ஏதாவது ஒரு வகையில், இந்த ஆண்டு அதை நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த, இப்போது நீட்டித்திருக்கிற மாநகராட்சிப் பகுதிகளுக்கும், இந்தக் கழிவு நீர்த்திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். இரண்டாவது கேள்வியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அந்தத் திட்டத்திலே அரசு அத்துணை கவனத்தையும் செலுத்தியிருக்கிறது. இன்றைக்கு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே இருக்கிற நடைமுறைச் சிக்கல்களை நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன். நிலத்தைக் கையகப்படுத்துவதில் இருக்கிற பிரச்சினை இன்றைக்கு பூதாகரமாக ஆக்கப்பட்டு இருக்கிறது. அங்கே அதிகாரிகள் செல்கிறபோது, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது. இது சம்பந்தமாக சேலம் இரண்டாவது தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்களும் என்னிடத்திலே வந்து இதைப் பற்றித் தெரிவித்தபோது, அவர்களுடைய கோரிக்கையை வைத்துதான் அங்கே அந்த மேல்மட்ட ஆய்வுக் கூட்டம் போடப்பட்டது. அங்கேயுள்ள அதிகாரிகள் பனமரத்துப்பட்டி ஏரிக்கே செல்ல முடியாத ஒரு நிலையை அங்கே இருக்கிற ஆக்கிரமிப்பாளர்கள் உருவாக்கிய காரணத்தாலே, --மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோர் அங்கே சட்டம் ஒழுங்கு நிலை உருவாகுகிற நிலைமை இருக்கிறது, --இது மிக மோசமாகப் போகக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது, அதிகாரிகள் அங்கே செல்ல முடியாத நிலைமையும் இருக்கிறது, மேலும் அரசினுடைய கையைக் கட்டிப் போடுகிற வகையில் உயர்நீதிமன்றத்தினுடைய தடையாணையும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தாலேதான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல. ஆகவே இந்தத் திட்டத்திற்கு பனமரத்துப்பட்டி ஏரியினுடைய நிலத்தைக் கையகப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இதிலே உள்ள தடையாணையை நீக்கிவிட்ட பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற யோசனையைக் கருத்திலே எடுத்து, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*